**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.04** **நாள் : 06.01.2025**

**சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் 2025 தொடர்பான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியலினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று வெளியிட்டார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் 2025 தொடர்பான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியலினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று (06.01.2025) ரிப்பன் கட்டட கூட்டரங்கில் வெளியிட்டார்.

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.பி.சுரேஷ், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி சென்னை மாவட்டத்தில் அடங்கியுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் 2025-ஆம் ஆண்டிற்கான சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல்கள் கடந்த 29.10.2024 அன்று வெளியிடப்பட்டன.

01.01.2025-ஆம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு, வாக்காளர் பட்டியல்களில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் உள்ள பதிவுகளில் திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து உரிய படிவங்கள் 29.10.2024 முதல் 28.11.2024 முடிய பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட படிவங்கள் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலரால் நேரடி ஆய்விற்கு பின்னர் சட்டமன்றத் தொகுதியினைச் சார்ந்த வாக்காளர் பதிவு அலுவலர்களால் படிவங்கள் ஏற்பு அல்லது நிராகரிப்பு குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது. ஏற்பளிப்பு செய்யப்பட்ட படிவங்கள் அடிப்படையில் 2025-ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல் இன்று **(06.01.2025**) வெளியிடப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, உதவி ஆணையாளர் அலுவலகங்களிலும், வாக்குச்சாவடி

மையங்களிலும் பொதுமக்கள் பார்வையிடலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் பொதுமக்கள் "http://voters.eci.gov.in/" என்ற இணையதளம் மூலமாகவும் பார்த்துக் கொள்ளலாம்.

கடந்த **29.10.2024** தேதியன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் சென்னை மாவட்டத்திலுள்ள **16** சட்டமன்றத் தொகுதிகளுக்கான மொத்த வாக்காளர்களது விவரங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| 1 | **ஆண்கள்** | : | 19,41,271 |
| 2 | **பெண்கள்** | : | 20,09,975 |
| 3 | **இதரர்** | : | 1,252 |
| | **மொத்தம்** | : | 39,52,498 |

2025ம் ஆண்டு சிறப்பு சுருக்க திருத்தம் தொடர்பாக **96,504** நபர்கள் சேர்த்தல் தொடர்பாக மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1 | **ஆண்கள்** | : | 45,134 |
| 2 | **பெண்கள்** | : | 51,328 |
| 3 | **இதரர்** | : | 42 |
| | **மொத்தம்** | : | 96,504 |

மேற்படி பெறப்பட்ட படிவங்கள் மீது உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டு, துணை பட்டியல்களில் பெயர் சேர்க்கப்பட்ட வாக்காளர்களது எண்ணிக்கை **96,184** அதன் விவரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1 | **ஆண்கள்** | : | 44,974 |
| 2 | **பெண்கள்** | : | 51,168 |
| 3 | **இதரர்** | : | 42 |
| | **மொத்தம்** | : | 96,184 |

வாக்குச்சாவடி நிலை அலுவலர்களது களஆய்வின் போது கண்டறியப்பட்ட இடம் பெயர்ந்தோர், காலமானோர் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளில் இடம் பெற்றோர் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் பெயர் நீக்கம் செய்ய கோரி வரப்பெற்ற படிவம்-7ன் எண்ணிக்கை **32,964** ஆகும். அவற்றில் வாக்காளர் பதிவு அலுவலர்களது விசாரணைக்கு பின்னர் வாக்காளர் பட்டியல்களிலிருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை **32,804** ஆகும். மேலும், எந்த நபர்களும் வாக்காளர் பட்டியலில், தகுதியின்மை அடிப்படையில் தன்னிச்சையாக **(Suo-Moto)** நீக்கம் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், இவ்வாறு அனைத்து தொகுதிகளிலும் இந்திய தேர்தல் ஆணைய நடைமுறைகளைப் பின்பற்றி வாக்காளர் பட்டியலிலிருந்து இறந்துபோன, நிரந்தரமாக குடிபெயர்ந்தவர்கள் மற்றும் பலமுறை பட்டியல் பதிவுகள் (Repeated) ஆகிய பெயர்கள் தொடர் திருத்தம் மற்றும் சிறப்பு சுருக்கத் திருத்த காலங்களில் நீக்கம் செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1 | **ஆண்கள்** | : | 15,966 |
| 2 | **பெண்கள்** | : | 16,820 |
| 3 | **இதரர்** | : | 18 |
| | **மொத்தம்** | : | 32,804 |

மேற்குறிப்பிட்ட **32,804** நீக்கம் செய்யப்பட்ட பெயர்களில் **1752** இறந்தவர்கள், **30,717** நிரந்தரமாக குடிபெயர்ந்தவர்கள் மற்றும் **335** பலமுறை பட்டியலில் பதிவு செய்யப்பட்டவராவர் (Repeated).

இன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலுக்கு பின்னர் சென்னை மாவட்டத்தில் உள்ள **16** சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர்களது எண்ணிக்கை விவரங்கள்

| வ. எண் | சட்டமன்றத் தொகுதிகளின் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | மூன்றாம் பாலின வாக்காளர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | எண்.11 டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் | 1,20,727 | 1,30,082 | 121 | 2,50,930 |
| 2. | எண்.12. பெரம்பூர் | 1,45,072 | 1,50,696 | 92 | 2,95,860 |
| 3. | எண்.13. கொளத்தூர் | 1,40,790 | 1,48,074 | 73 | 2,88,937 |
| 4. | எண்.14. வில்லிவாக்கம் | 1,19,733 | 1,24,730 | 65 | 2,44,528 |
| 5. | எண்.15. திரு.வி.க.நகர் | 1,08,105 | 1,14,547 | 75 | 2,22,727 |
| 6. | எண்.16. எழும்பூர் | 96,546 | 98,535 | 70 | 1,95,151 |
| 7. | எண்.17. ராயபுரம் | 96,217 | 1,00,745 | 73 | 1,97,035 |
| 8. | எண்.18. துறைமுகம் | 92,615 | 86,296 | 69 | 1,78,980 |
| 9. | எண்.19. சேப்பாக்கம் / திருவல்லிக்கேணி | 1,17,597 | 1,22,180 | 63 | 2,39,840 |
| 10. | எண்.20. ஆயிரம் விளக்கு | 1,16,363 | 1,21,998 | 114 | 2,38,475 |
| 11. | எண்.21. அண்ணா நகர் | 1,37,140 | 1,43,248 | 102 | 2,80,490 |
| 12. | எண்.22. விருகம்பாக்கம் | 1,42,634 | 1,44,692 | 91 | 2,87,417 |
| 13. | எண்.23. சைதாப்பேட்டை | 1,34,153 | 1,39,382 | 88 | 2,73,623 |
| 14. | எண்.24. தியாகராயநகர் | 1,15,975 | 1,19,588 | 53 | 2,35,616 |
| 15. | எண்.25. மயிலாப்பூர் | 1,30,527 | 1,39,055 | 45 | 2,69,627 |
| 16. | எண்.26. வேளச்சேரி | 1,56,085 | 1,60,475 | 82 | 3,16,642 |
| | மொத்தம் | **19,70,279** | **20,44,323** | **1,276** | **40,15,878** |

தற்போது வெளியிடப்பட்டுள்ள இறுதி வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களது எண்ணிக்கை கடந்த **29.10.2024** அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களது எண்ணிக்கையினைவிட **63,380** கூடுதல் என்றும், இந்த எண்ணிக்கை வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களைவிட **1.60** சதவீதம் கூடுதல் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வாக்காளர் எண்ணிக்கை குறைந்தபட்சமாக எண்.18.துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் **1,78,980** வாக்காளர்களும், அதிகபட்சமாக எண்.26.வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் **3,16,642** வாக்காளர்களும் உள்ளனர்.

இன்று வெளியிடப்பட்டுள்ள இறுதி வாக்காளர் பட்டியலில் **19,70,279** ஆண் வாக்காளர்களும், **20,44,323** பெண் வாக்காளர்களும் மற்றும் **1,276** மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் **40,15,878** நபர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளனர்

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**